## குஜராத் மாடல் குற்றக் குழும சதி!

**ம**க்களாட்சியின் இன்றியமையாத ஒன்று, மக்கள் நலக் கொள்கை சார்ந்து உயிர்ப்புடன் செயல்படும் எதிர்க்கட்சிகள். கடந்த பத்தாண்டு கால எதேச்சதிகார ஆட்சி, தன்னிச்சையாக வெறியாட்டம் போட்டதற்குக் காரணம் அந்தத் தடை இல்லை என்பதாலேயேதான்.

ஒன்றிய அரசின் உயர் ஆட்சிப் பொறுப்புகளில் (Additional Secretary, Joint Secretary, Deputy Secretary) தனியார் துறையினரை நியமனம் செய்யும் கொள்கை முடிவை, இவர்கள் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்து, நிதித்துறை, நிதி அயோக், செபி ( SEBI) போன்ற கொள்கை முடிவெடுக்கும் அதிகார மையங்களில் இருத்தியும் விட்டார்கள். அவர்களுக்குத் தன்னிச்சையாக முடிவெடுக்க அதிகாரம் உண்டு, ஆனால், அரசு அதிகாரிகளுக்கான பணி விதிமுறைகளுக்குக் கட்டுப்பாடு கிடையாது.

என்னென்ன விதமான தகிடுதத்தம். உர மானியம் நீக்குதல், கார்ப்பரேட்டுகளின் வாராக்கடன்களைத் தள்ளுபடி செய்வது எனப் பலவும் அவர்கள் ஆட்டமே. இவர்கள் நேரடியாக கார்ப்பரேட் நிறுவனங்களில் இருந்து வந்து காரியம் முடித்து அங்கேயே திரும்புவார்கள். இது குஜராத் மாடல் கண்டடைந்த அமெரிக்க மாதிரி. ஆட்சியாளரோடு (Presidential Cabinet) கலைந்து விடும் ஆட்சி மாதிரி. நமது இந்திய ஆட்சி வடிவம் நிரந்தர அதிகாரிகள் கொண்டது. தங்கள் சித்து வேலைகளில் நிரந்தர அதிகார வர்க்கத்தினரில் சிலர், முழுவதும் ஒத்துழைக்க மறுப்பார்கள் எனக் கருதி, எடுத்த குஜராத் மாடல் குற்றக் குழுமச் சதி.

இதோ வலுவான இந்தியா கூட்டணி எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வக்ஃப் வாரிய மசோதா கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இது தொடரும். இப்போது கேளுங்கள், அரசியல் அறிவுசீவிகளே, நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று? பதில் நேரடியானது. மக்களாட்சியை மீட்போம்!

–எழுத்தாளர் வீ.மா.ச.சுபகுணராஜன் முகநூல் பதிவு

## ஃப்ளாஷ்பேக்



ஜெ.இராஜசேகரன்



### மனதை விட்டு நீங்காத நினைவுகள்!

2006-ஆம்ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று மகளிர் சுயஉதவிக் குழுவினருக்குச் சுழல் நிதி வழங்க, கோவை வருகை தந்திருந்தார். அப்போது, அவர் தங்கி இருந்த விருந்தினர் விடுதியில் சந்தித்து அவரை வரவேற்று, சால்வை அணிவித்தேன். அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி, மாநகர் மாவட்டக் கழக செயலாளர் எம்.வீரகோபால் ஆகியோருடன் கழகத் தலைவர் தளபதியுடன் பகுதிப் பிரதிநிதியாக இருந்த நான், எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. என்றைக்கும் என் மனதை விட்டு நீங்காது.

**– ஜெ.இராஜசேகரன், மாவட்ட மீனவர் அணித் துணை அமைப்பாளர், கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘ஹோம்லாண்டு’ தொடக்கச் சிக்கல்!

1954-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு ‘ஹோம்லாண்டு’ பத்திரிகை வெளிவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தி.மு.கழகக் கொள்கைகளை ஆங்கிலத்தில் கொண்டு வர அந்தப் பத்திரிகை உதவும் என அண்ணா நினைத்தார். அப்போது, ‘ஹோம்லாண்டு’ பத்திரிகையின் உரிமையாளரும் வெளியீட்டாளரும் அண்ணாவின் நெருக்கமான நண்பருமான எஸ்.எஸ்.பி. லிங்கம் அவர்களின் பெயர் விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால், அறிவித்தபடி இதழ் வெளியாகவில்லை. பின்னர்தான் வெளியானது.


## சீரணி → இளைஞர் அணி

25

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

ஓவியம் : ரவி பேலட்



# சீரணிக்கு ‘தமிழரசு!’

**சீ**ரணி அமைப்பின் செயல்பாடுகள் குறித்து, ‘நம்நாடு’, ‘சீரணி’ உள்ளிட்ட இதழ்களில் அவ்வப்போது எழுதப்பட்டு வந்தாலும், கட்டுரைத் தொடராக எந்த இதழிலும் வெளிவந்ததில்லை. இந்நிலையில், 1970–ஆம் ஆண்டு ஜூலை 1–ஆம் தேதி, தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் விதத்தில் **‘தமிழரசு’** என்ற பெயரில் இதழ் ஒன்றைத் தொடங்கினார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அந்த இதழில், 1975–ஆம் ஆண்டு வரை சீரணி அமைப்பு குறித்து, தொடர் கட்டுரைகள் ஒவ்வோர் இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. அதன் முதல் இதழிலேயே **‘சீரணிப் பாடிவீட்டில்’** என்ற தலைப்பில் சீரணி அமைப்பினருக்கு வழங்கப்பட்ட ஒருவார காலப் பயிற்சி குறித்த அனுபவக் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

“பண்டைத் தமிழகத்தில் சேனை தழையாக்கி, செங்குருதி நீர் தேக்கி, ஆனைமிதிக்கும் அருஞ்சேராம் போர்க்களத்தில் படை முழங்கப் புறப்பட்ட வீர மறவர்களின் ஆர்வத்தைப் போலவே எங்கள் ஆர்வமும் இருந்தது. ஆனால், நாங்கள் போரிடப் புறப்படவில்லை. புனிதமான பயிற்சிக்குப் புறப்பட்டோம், எங்கள் பயிற்சிப் பாடிவீடு அமைந்தது கிண்டி பொறி இயல் கல்லூரியில்தான். அந்த ஏழு நாட்கள் பயிற்சியும் எவ்வளவு சுவையான அனுபவம்!

ஒரு சீரணித் தோழரின் உறவினர் வெளி மாநிலத்தில் இருப்பவர் சொன்னாராம். “மைய அரசு செய்தித்துறை பல்வேறு மொழிகளில் நம் சீரணியைப் பற்றி செய்தி வெளியிட்டிருப்பதால், அம்மாநில மக்கள் நன்கு சீரணியைப் பற்றியும் தெரிந்திருக்கிறார்கள்” என்று.

பல்கேரிய நாட்டில்கூட நம் சீரணியைப் பாராட்டி, அந்நாட்டு ஏடு ஒன்றில் செய்தி வந்திருக்கிறதாம்.

சீரணிப் பாடி வீட்டில் பயிற்சி பெற்ற எங்கள் அணிவகுப்பைக் காண மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சூன் 2 ஆம் நாள் வந்தார்கள். வட சென்னை, தென் சென்னை சீரணித் தோழர்கள் ஆயிரம் பேர் அணிவகுப்பில் கலந்துகொண்டோம்.

அணிவகுப்பைப் பார்வையிட்ட கலைஞர் அவர்கள் கூறினார்கள்:

“பொது மக்கள் எந்த நேரத்திலும் உங்களை, சீரணித் தொண்டர்கள் என்று அறிந்து கொள்ளத் தக்க விதத்தில், சீரணிக்கு என்று தரப்பட்ட பதக்கம் என்றென்றும் உங்கள் சட்டைகளில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசையாகும். நீங்கள் உதாரணமாக ஒரு குழந்தையை கார் விபத்திலிருந்து காப்பாற்றும் நேரத்தில், காப்பாற்றியவர் ஒரு சீரணித் தொண்டர் என்று மக்கள் தெரிந்து கொண்டால், அந்த அன்புப் பரிசே அண்ணாவின் காலடியில் நாம் வைக்கக் கூடிய பரிசாகும். நீங்கள் நல்ல காரியங்களில் ஈடுபடும் போதெல்லாம் ‘சீரணித் தொண்டர்’ என்னும் இந்தப் பதக்கம் உங்கள் நெஞ்சில் பதிந்து கொண்டிருக்குமானால், சீரணி நல்ல காரியங்களைச் செய்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும்.”

கலைஞர் அவர்களின் இந்தச் சொல்லோவியம் சீரணித் தொண்டர்களின் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாக அமைந்துவிட்டது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?” – என்று சென்னை பூங்கா நகர் தொகுதி சீரணித் தலைவராக இருந்த மணிவண்ணன் என்பவரின் அனுபவம், கட்டுரையாக மலர்ந்திருக்கிறது. அந்தப் பயிற்சி முகாமை தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் தொடங்கி வைத்திருக்கிறார். அந்த முகாமில், ‘முதலுதவி’, ‘தீத் தடுப்பு’, ‘கோழி வளர்ப்பு’, ‘முதியோர் கல்வி’, ‘குடும்பக் கட்டுப்பாடு’, ‘நலவழிப் பணிகள்’, ‘பொதுப் பணிகள்’ உள்ளிட்ட துறைகளில் சீரணியினருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**காப்பாற்றியவர், ஒரு சீரணித் தொண்டர் என்று மக்கள் தெரிந்து கொண்டால், அந்த அன்புப் பரிசே அண்ணாவின் காலடியில் நாம் வைக்கக்கூடிய பரிசாகும்.**

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி

25

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”



# பயன் தரும் கொண்டாட்டங்கள்!

***எ**திரெதிர் சித்தாந்தம் கொண்ட ஒன்றிய மாநில ஆளும் கட்சிகள், அரசு விழாவில் ஒன்றாகக் கலந்து கொள்வது, கூட்டணிக் கணக்கு என முடிவு செய்ய முடியுமா?*

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிடும் விழாவில், ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றாகக் கலந்துகொண்டதால், பா.ஜ.க.வுக்கும் தி.மு.கவுக்கும் ரகசிய உறவு என்கிறார், இன்னமும் பா.ஜ.க.வுடன் கொல்லைப்புற உறவு வைத்திருக்கும் எடப்பாடி பழனிசாமி. நாணயம் வெளியிடும் அதிகாரம் ஒன்றிய அரசிடம்தான் உள்ளது. அதன் அமைச்சராக உள்ளவர் வெளியிடுவதுதானே கலைஞருக்குச் சிறப்பு என்று சொன்னாலும் எடப்பாடிக்கு ஏறவில்லை. எம்.ஜி.ஆருக்கு நாணயம் வெளியிட்டபோது, பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தும் பா.ஜ.க. அமைச்சர்களை நாங்கள் அழைக்கவில்லை என்று எடப்பாடி பழனிசாமி சொல்கிறார்.

எம்.ஜி.ஆர் நூற்றாண்டு தொடக்க விழாவை, 2016–ஆம் ஆண்டிலேயே கொண்டாடியிருக்க வேண்டும். அப்போது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்ததால், எம்.ஜி.ஆரைப் பற்றி வாய் திறந்து ஏன் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று, அ.தி.மு.க.வை ஆரம்பித்தவரின் நூற்றாண்டையே தள்ளிப் போட்டவர்கள்தான் எடப்பாடி பழனிசாமி வகையறாக்கள். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகே, 2017–ஆம் ஆண்டு ஜனவரியில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நிறைவில் தொடக்க விழாவை ஆரம்பித்தார்கள்.

நூற்றாண்டு விழாவுக்காகவும், சட்டமன்றத்தில் ஜெயலலிதா படத்தைத் திறப்பதற்காகவும் பிரதமரை அழைத்திருக்கிறோம் என்று, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பேட்டியளித்தவர் அப்போதைய முதலமைச்சரான எடப்பாடி பழனிசாமி. சென்னை கடற்கரை சாலையில் ஒரு வளைவு, சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்கு எம்.ஜி.ஆர். பெயர், ‘மெயின் ரோடு புகழ்’ முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் பாட்டுக் கச்சேரி, இதுதான் எம்.ஜி.ஆர் நூற்றாண்டைக் கொண்டாடிய விதம்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை, கிண்டியில் ‘பன்னோக்கு மருத்துவமனை’, ‘கிளாம்பாக்கம் பேருந்து முனையம்’, மதுரையில் ‘பிரம்மாண்ட நூலகம்’ எனப் பயன் தரும் பல திட்டங்களாகக் கொண்டாடியிருக்கிறது, திராவிட மாடல் அரசு. அந்த வகையில், ஒன்றிய அரசு நினைவு நாணயம் வெளியிட, அதையும் சிறப்பான விழாவாக முன்னெடுத்தது. சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் படத்தை 2021–ஆம் ஆண்டு திறந்து வைத்தவர் அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த். ஜெயலலிதா படத்தைத் திறந்து வைக்க, பிரதமரை எடப்பாடி பழனிசாமி அழைத்தும் அவர் ஏன் வரவில்லை? சொத்து குவிப்பு ஊழல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டவரின் படத்தை பிரதமர் திறந்து வைக்க நெறிமுறைகள் அனுமதிக்காது என்பதால்தான். அ.தி.மு.க தலைமைகளின் லட்சணம் அப்படி!


**ஜெயலலிதா படத்தைத் திறந்து வைக்க, பிரதமரை எடப்பாடி பழனிசாமி அழைத்தும் அவர் ஏன் வரவில்லை?**

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

578

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131